வேலை கொடுப்போர் பிரதிநிதிகள் :

திரு. பி. ராமதாஸ், பங்குதாரர், ஸ்ரீமங்களாம்பிகா பட்டு வீச்சுதொழிற் சாலை, கும்பகோணம்.

திரு. என். கே. சுப்பராயச் செட்டியார், ஸ்ரீ லட்சுமி சரஸ்வதி பட்டு வீச்சு தொழிற்சாலை, ஆரணி.

தொழிலாளர் பிரதிநிதிகள் :

தலைவர், காஞ்சீபுரம் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் சங்கம், காஞ்சீபுரம்.

துணைத் தலைவர், குடந்தை பட்டு நெசவுத் தொழிலாளர்கள் சங்கம், கும்பகோணம்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, கைத்தறி நெசவுக் கூட்டுறவுத் துறையில் இல்லாத நெசவாளர்களுக்கும் சேர்த்து அந்தக் குழு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : சேர்த்துத்தான் ஆராயும்.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்தக் கைத்தறித் தொழிலாளர்கள் குறைந்தபட்ச கூலி சம்பந்தமாகப் போடப்பட்டிருக்கின்ற குழுக்கள் எல்லாம் —சந்தானம் கமிட்டி, இப்போது குறிப்பிட்ட கமிட்டி, பட்டு நூல் சம்பந்தப் பட்ட கமிட்டி—அது குறித்து பணிகளை நடத்தி இருக்கிறார்கள். அதிலே எந்தக் கமிட்டி கூறுகின்ற குறைந்த பட்சக் கூலியை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, அந்தக் குழுக்களின் அறிக்கைகள் கிடைத்த பிறகு அது பற்றி ஆராயப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : சார், அகில இந்திய தொழிற்சங்க கூட்டமைப்பு கைத்தறி நெசவாளர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் நீட்—பேஸ்ட் வேஜஸ் என்று ரூ. 250 நிர்ணயிக்கலாம் என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். அவர்களுடைய தீர்மானத்தை அரசு ஏற்றுக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : நான் ஏற்கனவே தெரிவித்தபடி அந்தக்குழுக்களின் அறிக்கைகள் வந்த பிறகு அதுபற்றி பரிசிலிக்கப்படும்.

1975 பிப்ரவரி 10]

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, கைத்தறித் தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியத்தை நிர்ணயிக்க அமைக்கப்பட்டுள்ள குழுவில் ஆக்சுவல் கைத்தறித்தொழிலாளர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அவர்களுக்கு அதிகப் பங்கு அந்தக் குழுவில் இல்லை என்பது போல் தெரிகிறது. அவர்களுக்கு அதிகப் பங்கு பெற வாய்ப்பு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் அதில் இடம்பெற்று இருக்கிறார்கள். பெரும் பாலும் நெசவாளர்கள் இருக்கிறார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் கூறியதற்கு ஏற்ப அந்தப் பிரச்னையை அவர்கள் கவனிப்பார்கள்.

திரு. எ. க. துரைசாமி : தலைவரவர்களே, கைத்தறித் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயிப்பதற்காக அமைக்கப்பட்டிருக்கும் குழுவிற்கு கூட்டுறவுத் துறைக்கு வெளியில் இருக்கும் நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் நூல் ரிபேட் போன்ற வசதிகள் அளிக்க வாய்ப்பில்லை என்பதைச் சுட்டிக் காட்டி அதைக் கருத்தில் கொண்டு நிர்ணயம் செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஏற்கனவே விவரம் சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும், கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தினை அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்ததும் கவனத்தில் கொண்டு ஆராயப்படும்.

கோவை பஞ்சாலைத் தொழிலாளர்கள்

* 106. **வின—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மில் தொழிலாளர் குறையினை ஆராய குழு ஒன்று நியமிக்கப்பட இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அந்தக் குழுவில் யார் யார் அங்கம் வகிப்பார்கள்?

(உ) அந்தக் குழுவில் நடைமுறைத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) ஆம்.

(இ) அந்தக் குழுவில் கீழ்க்கண்டவர்கள் அங்கம் வகிக்கின்றனர் :

தலைவர் :

திரு. வி. பி. அருணகிரி, பி.ஏ., பி.எல். மாவட்ட நீதிபதி (தற்போது கோயம்புத்தூர் தொழில் நீதிமன்ற நீதிபதியாக உள்ளார்).

நிர்வாகத்தினர் பிரதிநிதிகள் :

(1) திரு. ஆர். எத்திராஜுலு, கோயம்புத்தூர் காட்டன் மில்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(2) திரு. சி. துரைசாமி, பிங்க் & பார்ட்ரிட்ஜ், சென்னை.

(3) திரு. கே. ராமன், மதுரை மில் கம்பெனி, மதுரை.

(4) திரு. பி. ஏ. கிருஷ்ணமூர்த்தி, கோத்தாரி டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

(5) திரு. எஸ். ஆர். கிருஷ்ணமூர்த்தி, தென்னிந்திய ஆலை அதிபர்கள் சங்கம், கோயம்புத்தூர்.

(6) திரு. எம். ஏழுமலை, தமிழ்நாடு ஆலை அதிபர்கள் சங்கம், மதுரை.

(7) திரு. எஸ். ஆர். சுரேந்திரன், மதுரை.

(8) கைத்தறி மற்றும் ஜவுளித்துறை இயக்குநர் அல்லது அவருடைய பிரதிநிதி.

தொழிலாளர் பிரதிநிதிகள் :

(9) திரு. ஏ. எம். கோவிந்தராஜன், (ஏ.ஐ.டி.யு.சி.).

(10) திரு. ஏ. சுப்பிரமணி, எம்.எல்.ஏ. (எச்.எம்.எஸ்.).

(11) திரு. எம். எஸ். ராமச்சந்திரன் (ஐ.என்.டி.யு.சி.).

(12) திரு. கே. ரமணி (சி.ஐ.டி.யு.).

(13) திரு. பி. ஏ. கன்னையா நாயுடு, பாபநாசம் தொழிலாளர் யூனியன், விக்கிரமசிங்கபுரம்.

(14) திரு. பி. எஸ். சின்னதுரை, கோயம்புத்தூர் மாவட்ட ஐக்கிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், கோயம்புத்தூர்.

(15) திரு. கே. சி. ராமசாமி, கோயம்புத்தூர் மாவட்ட சோசலிச பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், கோயம்புத்தூர்.

(16) திரு. எஸ். துரைசாமி, எம். எல்.ஏ., கோயம்புத்தூர் மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், கோயம்புத்தூர்.

(உ) ஆம். பஞ்சாலைத் தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம், கிராக்கிப்படி ஆகியவற்றை எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பதை இக்குழு பரிசீலிக்கும்.